**World Christian Fellowship**
www.wcflondon.com
wcflondon@gmail.com

# Early Church leaders and Disciples.
# Acts 12:1-11.

**Acts 12:1-11,** ***அக்காலத்திலே ஏரோதுராஜா சபையிலே சிலரைத் துன்பப்படுத்தத் தொடங்கி; 2.***
***யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபைப் பட்டயத்தினாலே கொலை செய்தான். 3. அது***
***யூதருக்குப் பிரியமாயிருக்கிறதென்று அவன் கண்டு, பேதுருவையும் பிடிக்கத்தொடர்ந்தான்.***
***அப்பொழுது புளிப்பில்லாத அப்பப்பண்டிகை நாட்களாயிருந்தது. 4. அவனைப் பிடித்துச்***
***சிறைச்சாலையிலே வைத்து, பஸ்காபண்டிகைக்குப் பின்பு ஜனங்களுக்கு முன்பாக அவனை***
***வெளியே கொண்டுவரலாமென்று எண்ணி, அவனைக் காக்கும்படி வகுப்புக்கு நான்கு***
***போர்ச்சேவகராக ஏற்படுத்திய நான்கு வகுப்புகளின் வசமாக ஒப்புவித்தான். 5. அப்படியே***
***பேதுரு சிறைச்சாலையிலே காக்கப் பட்டிருக்கையில் சபையார் அவனுக்காக தேவனை நோக்கி***
***ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார்கள். 6. ஏரோது அவனை வெளியே கொண்டுவரும்படி***
***குறித்திருந்த நாளுக்கு முந்தின நாள் இராத்திரியிலே, பேதுரு இரண்டு சங்கிலிகளினாலே***
***கட்டப்பட்டு, இரண்டு சேவகர் நடுவே நித்திரைபண்ணிக்கொண்டிருந்தான்; காவற்காரரும்***
***கதவுக்கு முன்னிருந்து சிறைச்சாலையைக் காத்துக்கொண்டிருந்தார்கள். 7. அப்பொழுது***
***கர்த்தருடைய தூதன் அங்கே வந்து நின்றான்; அறையிலே வெளிச்சம் பிரகாசித்தது, அவன்***
***பேதுருவை விலாவிலே தட்டி, சீக்கிரமாய் எழுந்திரு என்று அவனை எழுப்பினான். உடனே***
***சங்கிலிகள் அவன் கைகளிலிருந்து விழுந்தது. 8. தூதன் அவனை நோக்கி: உன் அரையைக் கட்டி,***
***உன் பாதரட்சைகளைத் தொடுத்துக்கொள் என்றான். அவன் அந்தப்படியே செய்தான். தூதன்***
***பின்னும் அவனை நோக்கி: உன் வஸ்திரத்தைப் போர்த்துக்கொண்டு என் பின்னே வா என்றான். 9.***
***அந்தப்படியே அவன் புறப்பட்டு அவனுக்குப் பின்சென்று, தூதனால் செய்யப்பட்டது***
***மெய்யென்று அறியாமல், தான் ஒரு தரிசனங்காண்கிறதாக நினைத்தான். 10. அவர்கள்***
***முதலாங்காவலையும் இரண்டாங்காவலையும் கடந்து, நகரத்திற்குப்போகிற***
***இருப்புக்கதவண்டையிலே வந்தபோது அது தானாய் அவர்களுக்குத் திறவுண்டது; அதின்***
***வழியாய் அவர்கள் புறப்பட்டு ஒரு வீதி நெடுக நடந்துபோனார்கள்; உடனே தூதன் அவனை***
***விட்டுப்போய்விட்டான். 11. பேதுருவுக்குத் தெளிவு வந்தபோது: ஏரோதின் கைக்கும்***
***யூதஜனங்களின் எண்ணங்களுக்கும் என்னை விடுதலையாக்கும்படிக்குக் கர்த்தர் தம்முடைய***
***தூதனை அனுப்பினாரென்று நான் இப்பொழுது மெய்யாய் அறிந்திருக்கிறேன் என்றான்.***

அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் சபை உருவாகியது.

ஆதியிலே சபை விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு, தேவன் செய்த அற்புதமான காரியங்களை பல பாஷைகளில் அறிக்கையிட்டார்கள்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை பற்றிய சுவிஷேத்தை அப்போஸ்தலர்கள் பிரசிங்கிக்க தொடங்கின போது சபை வளர தொடங்கியது. அந்நாளிலே ஏறக்குறைய மூவாயிரம் பேர் இரட்சிக்கப்பட்டனர்.

அப்போஸ்தலர் 4ஆம் அதிகாரத்தில் ஒரே நாளில் 5000 பேர் சபைகளில் சேர்க்கப்பட்டனர்.

சபை வளர தொடங்கியது.

எருசலேமிலே சபைகள் பெருகிறயது அதனால் சுவிஷேசம் எங்கும் பரவ தொடங்கினது.

சுவிஷேசத்தை பிரசிங்கிக்க அப்போஸ்தலர்களுக்கு தடை வர தொடங்கியது. அப்போஸ்தலர்கள் துன்புருத்தப்பட்டார்கள், பிரசங்கிக்க கூடாது என்றும் பிரசிங்கத்தால் அடிக்கப்படுவார்கள் என்றும் மிரட்டப்பட்டார்கள். ஆனாலும் அப்போஸ்தலர்கள் தொடர்ந்து பிரசிங்கித்து அடிக்கப்பட்டார்கள்.

## ஆவிக்குரிய சபையை நடத்துகிற ஒரு தலைவன் செய்ய வேண்டிய காரியங்கள்.

### 1. தேவனை தவிர வேறு யாரையும் பிரியப்படுத்தக்கூடாது.

ஏரோது மனிதனை பிரியப்படுத்தினான், யாக்கோபு மற்றும் பேதுருவும் தேவனை பிரியப்படுத்தினார்கள்.

**V 3, *அது யூதருக்குப் பிரியமாயிருக்கிறதென்று அவன் கண்டு, பேதுருவையும் பிடிக்கத்தொடர்ந்தான்.***

**Galatians 1:10, *இப்பொழுது நான் மனுஷரையா, தேவனையா, யாரை நாடிப் போதிக்கிறேன்? மனுஷரையா பிரியப்படுத்தப்பார்க்கிறேன்? நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே.***

**1 Thessalonians 2:4, *சுவிசேஷத்தை எங்களிடத்தில் ஒப்புவிக்கத்தக்கதாய், தேவன் எங்களை உத்தமரென்றெண்ணினபடியே, நாங்கள் மனுஷருக்கு அல்ல, எங்கள் இருதயங்களைச் சோதித்தறிகிற தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசுகிறோம்.***

**Proverbs 29:25, *மனுஷனுக்குப் பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும்; கர்த்தரை நம்புகிறவனோ உயர்ந்த அடைக்கலத்திலே வைக்கப்படுவான்.***

**John 12:43, *அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள்.***

**Acts 5:29, *அதற்குப் பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும்: மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது.***

### 2. தேவன் உங்களை சார்ந்து/நம்பி இல்லை.

யாக்கோபு கொல்லப்பட்டார்.
பேதுரு சிறையில் அடைக்கப்பட்டார்.
ஆனாலும் சபை எப்போதும் போல நடந்தது.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சபையை நிறுவினார்.

நீங்கள் இந்த பூமியில் பிறக்கும் முன்பும் சரி, நீங்கள் இறந்து போன பின்பும் சரி சபை எப்பொழுதும் என்றென்றும் இருக்கிறது.

**1 Kings 19:10**, ***அதற்கு அவன்: சேனைகளின் தேவனாகிய கர்த்தருக்காக வெகு பக்திவைராக்கியமாயிருந் தேன்; இஸ்ரவேல் புத்திரர் உமது உடன்படிக்கையைத் தள்ளிவிட்டார்கள்; உம்முடைய பலிபீடங்களை இடித்து, உம்முடைய தீர்க்கதரிசிகளைப் பட்டயத்தினால் கொன்றுபோட்டார்கள்; நான் ஒருவன்மாத்திரம் மீதியாயிருக்கிறேன்; என் பிராணனையும் வாங்கத் தேடுகிறார்கள் என்றான்.***

**Romans 11:2-4**, ***தேவன் தாம் முன்னறிந்துகொண்ட தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிடவில்லை. எலியாவைக்குறித்துச் சொல்லிய இடத்தில், வேதம் சொல்லுகிறதை அறியீர்களா? அவன் தேவனை நோக்கி: 3. கர்த்தாவே, உம்முடைய தீர்க்கதரிசிகளை அவர்கள் கொலைசெய்து, உம்முடைய பலிபீடங்களை இடித்துப் போட்டார்கள்; நான் ஒருவன்மாத்திரம் மீதியாயிருக்கிறேன், என் பிராணனையும் வாங்கத்தேடுகிறார்களே என்று இஸ்ரவேலருக்கு விரோதமாய் விண்ணப்பம்பண்ணின போது, 4. அவனுக்கு உண்டான தேவஉத்தரவு என்ன? பாகாலுக்கு முன்பாக முழங்காற்படியிடாத ஏழாயிரம்பேரை எனக்காக மீதியாக வைத்தேன் என்பதே.***

ஸ்தேவான் அப்போஸ்தலர் 7 ஆம் அதிகாரத்தில் கொலை செய்யப்படுகிறார். அதற்குபின் யோவானை தவிர மற்ற அப்போஸ்தலர்கள் இரத்த சாட்சியாக மரிக்கிறார்கள். சபையை நடத்தின ஆயிரக்கணக்கானோர் மரித்து போயினர் ஆனாலும் சபை தொடர்ந்து செயலாற்றிக் கொண்டிருக்கிறது.

உங்களை நீங்கள் மேன்மை பாராட்டாதீர்கள்.

**Numbers 20:7-11**, ***கர்த்தர் மோசேயை நோக்கி: 8. நீ கோலை எடுத்துக்கொண்டு, நீயும் உன் சகோதரனாகிய ஆரோனும் சபையாரைக் கூடிவரச்செய்து, அவர்கள் கண்களுக்குமுன்னே கன்மலையைப் பார்த்துப் பேசுங்கள்; அப்பொழுது அது தன்னிடத்திலுள்ள தண்ணீரைக் கொடுக்கும்; இப்படி நீ அவர்களுக்குக் கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்படப்பண்ணி, சபையாருக்கும் அவர்கள் மிருகங்களுக்கும் குடிக்கக் கொடுப்பாய் என்றார்.***
***9. அப்பொழுது மோசே தனக்குக் கர்த்தர் கட்டளையிட்டபடியே கர்த்தருடைய சந்நிதியிலிருந்த கோலை எடுத்தான். 10. மோசேயும் ஆரோனும் சபையாரைக் கன்மலைக்கு முன்பாகக் கூடிவரச்செய்தார்கள்; அப்பொழுது மோசே அவர்களை நோக்கி: கலகக்காரரே, கேளுங்கள், உங்களுக்கு இந்தக் கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீர் புறப்படப்பண்ணுவோமோ என்று சொல்லி, 11. தன் கையை ஓங்கி, கன்மலையைத் தன் கோலினால் இரண்டுதரம் அடித்தான்; உடனே தண்ணீர் ஏராளமாய்ப் புறப்பட்டது, சபையார் குடித்தார்கள்; அவர்கள் மிருகங்களும் குடித்தது.***

**3.** பிரச்சனைகளை குறித்து கலங்க வேண்டாம்.

தேவன் எப்பொழுதும் உங்களோடு கூட இருக்கிறார். நீங்கள் எங்கே இருந்தாலும் தேவன் உங்களோடு இருக்கிறார்.

பேதுரு சிறைச்சாலையில் இருக்கிறார். அடுத்த நாள் கொலை செய்யப்பட போகிறார் ஆனாலும் அவர் அமைதியாக தூங்கிக்கொண்டிருக்கிறார்.

**V 6-8**, ***ஏரோது அவனை வெளியே கொண்டுவரும்படி குறித்திருந்த நாளுக்கு முந்தின நாள் இராத்திரியிலே, பேதுரு இரண்டு சங்கிலிகளினாலே கட்டப்பட்டு, இரண்டு சேவகர் நடுவே நித்திரைபண்ணிக்கொண்டிருந்தான்; காவற்காரரும் கதவுக்கு முன்னிருந்து சிறைச்சாலையைக் காத்துக்கொண்டிருந்தார்கள். 7. அப்பொழுது கர்த்தருடைய தூதன் அங்கே வந்து நின்றான்; அறையிலே வெளிச்சம் பிரகாசித்தது, அவன் பேதுருவை விலாவிலே தட்டி, சீக்கிரமாய் எழுந்திரு என்று அவனை எழுப்பினான். உடனே சங்கிலிகள் அவன் கைகளிலிருந்து விழுந்தது. 8. தூதன் அவனை நோக்கி: உன் அரையைக் கட்டி, உன் பாதரட்சைகளைத் தொடுத்துக்கொள் என்றான். அவன் அந்தப்படியே செய்தான். தூதன் பின்னும் அவனை நோக்கி: உன் வஸ்திரத்தைப் போர்த்துக்கொண்டு என் பின்னே வா என்றான்.***

நீங்கள் துன்பப்படுகிற நேரத்தில் தேவன் உங்களோடு இருக்கிறேன் என்று வாக்குரைத்திருக்கிறார்.

அவர்கள் உங்களை உபத்திரப்படுத்துவார்கள் என்று இயேசு கிறிஸ்து யோவான் 15ஆம் அதிகாரத்தில் கூறியிருந்தார்.
அவர்கள் உங்களை கொலை செய்வார்கள் என்று யோவான் 16ஆம் அதிகாரத்தில் கூறியிருந்தார்.

**Luke 12:4-5**, ***என் சிநேகிதராகிய உங்களுக்கு நான் சொல்லுகிறேன்: சரீரத்தைக் கொலைசெய்து, அதன்பின்பு அதிகமாக ஒன்றும் செய்யத் திராணியில்லாதவர்களுக்குப் பயப்படாதிருங்கள். 5. நீங்கள் இன்னாருக்குப் பயப்படவேண்டுமென்று உங்களுக்குக் காண்பிக்கிறேன்: கொலைசெய்தபின்பு நரகத்திலே தள்ள வல்லமையுள்ளவருக்குப் பயப்படுங்கள்; ஆம், அவருக்கே பயப்படுங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.***

சபை விசுவாசிகள்/சிஷர்கள்.

1. ஜெபம்

ஆவிக்குரிய தலைவர்களுக்காக ஜெபிக்க கற்றுக்கொள்ளுங்கள்.
நீங்கள் அவரிடம் ஜெபிக்க எல்லாரிடத்திலும் போகாதீர்கள்.

அ) ஜெபத்தினால் வரும் மறுமொழியை குறித்து கலங்காதிருங்கள்.

அப்போஸ்தலர்கள் ஜெபித்தார்கள் ஆனாலும் யாக்கோபை கொலை செய்தார்கள். இருந்தபோதும் அவர்கள் தடையில்லாமல் தொடர்ந்து ஜெபித்தார்கள்.

**1 John 5:14**, ***நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்.***
ஆ) இடைவிடாத ஜெபம்.

ஒரு நாள் மட்டும் அல்ல தொடர்ந்து ஜெபிக்க வேண்டும். பேதுரு பஸ்கா பண்டிகை வரை ஒரு வாரம் சிறைச்சாலையில் இருந்தார். அது வரை ஜெபித்தார்கள்.

**V 3-4,** ***அது யூதருக்குப் பிரியமாயிருக்கிறதென்று அவன் கண்டு, பேதுருவையும் பிடிக்கத்தொடர்ந்தான். அப்பொழுது புளிப்பில்லாத அப்பப்பண்டிகை நாட்களாயிருந்தது. 4.***

***அவனைப் பிடித்துச் சிறைச்சாலையிலே வைத்து, பஸ்காபண்டிகைக்குப் பின்பு ஜனங்களுக்கு முன்பாக அவனை வெளியே கொண்டுவரலாமென்று எண்ணி, அவனைக் காக்கும்படி வகுப்புக்கு நான்கு போர்ச்சேவகராக ஏற்படுத்திய நான்கு வகுப்புகளின் வசமாக ஒப்புவித்தான்.***

இ) இரவில் ஜெபித்தார்கள்.

யோவான், மாற்கு வீட்டில் இரவு வேளையிலும் ஜெபத்தார்கள்.

**Acts 12:12, *அவன் இப்படி நிச்சயித்துக்கொண்டு, மாற்கு என்னும் பேர்கொண்ட யோவானுடைய தாயாகிய மரியாள் வீட்டுக்கு வந்தான்; அங்கே அநேகர் கூடி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார்கள்.***

கர்த்தருடைய வாக்குத்தத்தம் நிறைவேறும் வரை அப்போஸ்தலர்களை மேல் வீட்டறையில் இருக்கும்படி இயேசு கிறிஸ்து கூறியிருந்தார்.

இயேசு கிறிஸ்து 500க்கும் மேற்பட்டவர்களுக்கு தரிசனமானார் என்று 1 கொரி 15ஆம் அதிகாரத்தில் காண்கிறோம்.
ஆனாலும் 9 நாளுக்கு பின், பத்தாம் நாள் அதாவது பெந்தேகொஸ்தே நாளில் கூடியிருந்தவர்கள் 120 பேர் மட்டுமே.

ஈ) ஐக்கியத்திற்காக கூடியிருந்தார்கள்

**Acts 12:12, *அவன் இப்படி நிச்சயித்துக்கொண்டு, மாற்கு என்னும் பேர்கொண்ட யோவானுடைய தாயாகிய மரியாள் வீட்டுக்கு வந்தான்; அங்கே அநேகர் கூடி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார்கள்.***

அவர்கள் ஓரிடத்தில் கூடியிருந்தார்கள்.

**Hebrews 10:25**, ***சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்.***

நீங்கள் பல்வேறு ஆட்களை சந்திக்க வேண்டும். அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அவர்களிடம் அன்பு செலுத்தி சேவை செய்ய வேண்டும்.

உ) சுவிஷேத்திற்காக சவாலை சந்திக்க தயாராக இருக்க வேண்டும்.

அப்போஸ்தலர்கள் கூடியிருந்து ஜெபிக்கிறார்கள் என்று ஏரோது அறிந்தால் அவர்களுக்கும் பிரச்சனை ஆனாலும் அதை பொருட்படுத்தாது அவர்கள் விசுவாசத்தோடே ஜெபித்தார்கள்.

நீங்கள் சுவிஷேத்தை பிரசங்கிப்பதின்/அறிவிப்பதின் நிமித்தம் வரும் சவாலை சந்திக்க தயராயிருக்கிறீர்களா?